[2005 ஏப்ரல் 11

(ஆ) பேரவையின் அலுவலர்கள் மாடத்தில் பதவி பெயர் குறித்த பலகை வைக்கப்படுவது

திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே,...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. துரைமுருகன், சொல்லுங்கள்.

திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் இந்த மன்றத்தினுடைய நீண்டநாள் உறுப்பினர், நானும் உறுப்பினர், மற்றவர்களும் உறுப்பினர்கள். ஆனால், இதுவரையிலே நான் காணாத ஒரு புதுமை என்னவென்று கேட்டால், இங்கேயிருக்கிற Officers உட்கார்ந்திருக்கிற gallery-யில், எந்தெந்த இலாகாவைச் சார்ந்தவர்களோ, முதலமைச்சர் அலுவலகத்தைச் சார்ந்தவர்களோ அல்லது Chief Secretary-யோ வந்து உட்காருவார்கள், போவார்கள், பார்த்திருக்கிறோம். ஆனால், இப்போது திடீர் திடீரென்று ஒவ்வொரு நாளும் தலைமைச் செயலாளர் என்று ஒரு போர்டு, Finance Secretary என்று ஒரு போர்டு, இப்படி வைக்கிறார்கள். சரி, அவர்கள்தான் உட்காருகிறார்களா என்று கேட்டால், அவர்களும் உட்காருவதில்லை. ஆக, மாறி உட்காருகிறார்கள். இப்படியொரு நிலைமையை ஏன் புதிதாக இப்போது ஆரம்பித்திருக்கிறார்கள்? இதுவரையில், கடந்த 20, 23 வருடங்களிலே நான் பார்க்காதது, இப்போது வைப்பதினாலே ஒன்றும் தலைமுழுகிப் போய்விடவில்லை. ஏன், என்ன காரணம்? தெரிந்து கொள்ளலாம் என்றுதான். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன காரணம் என்பதை நான் விசாரித்துச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) விசாரித்துச் சொல்கிறேன். திரு. எ.வ. வேலு.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற வளாகம் என்பது உங்களுடைய பராமரிப்பில் இருக்கிறது. உங்களுக்குக் கீழே வருகிறது. உங்களுக்குத் தெரியாமல், அதைப்போன்ற போர்டுகள் வைப்பதும், வேறு எதுவும் செய்வதும் முறையல்ல. உங்களுக்கோ, சட்டமன்றப் பேரவைச் செயலாளருக்கோ தெரியாமல் அங்கே எதுவும் வைக்கமுடியாது. ஆக, எப்படி அதை வைத்தார்கள்? யாருடைய அனுமதியின் பேரிலே அதை வைத்தார்கள் என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, எப்போதுமே அந்தந்த மானியக் கோரிக்கைகள் தொடர்பான அரசு அலுவலர்கள் வந்து அமர்வதுண்டு. தாங்கள் சொல்லியது என்னுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. என்னவென்று பார்க்கிறேன். (குறுக்கீடுகள்)

2005 ஏப்ரல் 11]

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: தினசரி தலைமைச் செயலாளர் என்று ஒரு போர்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, நீங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்துவிட்டீர்கள். என்னவென்று பார்க்கிறேன். திரு. எ.வ. வேலு. (குறுக்கீடு)

திரு. கே.ஆர். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், உட்காருங்கள். அதற்கெல்லாம் இப்போது விளக்கம் எல்லாம் சொல்லியிருக்கிறார்கள்.

4. கவன ஈர்ப்பு

(அ) சாத்தனூர் அணை ஆயக்கட்டில் நீரின்றி பயிர்கள் பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவரசப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. எ.வ. வேலு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். (குறுக்கீடு) திரு. எ.வ. வேலு வாசியுங்கள்.

திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சாத்தனூர் அணை ஆயக்கட்டில் 45 ஆயிரம் ஏக்கர் நிலத்திலுள்ள பயிர்கள் நீரின்றி பாதிக்கப்பட்டுள்ளது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொணடுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைமுன் விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிக்கை

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், சாத்தனூர் கிராமத்தில் தென் பெண்ணையாற்றின் குறுக்கே சாத்தனூர் அணை கட்டப்பட்டுள்ளது. சாத்தனூர் நீர்த்தேக்கத்திலிருந்து இடது மற்றும் வலதுபுறக் கால்வாய்கள்மூலம் முறையே 24,000 ஏக்கர் மற்றும் 21,000